RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING — மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 238 | செப்டம்பர் 02, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையை திறந்து வைத்தார் முதல்வர் விஜய்

மேட்டூர்: செப்.2-

தமிழக முதல்வர் விஜய் முதல் முறையாக மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக தண்ணீரை திறந்து வைத்தார்.

மேட்டூரில் காவிரியின் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. தமிழகத்தின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ள மேட்டூர் அணை முழுக் கொள்ளளவை எட்டும் போது 93.47 டிஎம்சி நீர் இருப்பு இருக்கும் .

மேட்டூர் அணையில் திறக்கப்படும் நீரைப் பயன்படுத்தி சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி உட்பட 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 17.15 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மேலும் 16 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் குறுவை, சம்பா, தாளடி நெல் சாகு படி மேற்கொள்ளப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி முதல் ஜனவரி 28-ம் தேதி வரை 230 நாட்களுக்கு மொத்தம் 330 டிஎம்சி நீர் தேவைப்படும். அணையில் நீர் இருப்பை பொறுத்து, ஜூன் 12-ம் தேதிக்கு முன்போ, அல்லது காலதாமதமாகவோ அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

காவிரி டெல்டா பாசனத்துக்கு நீர் திறக்க வேண்டுமானால் அணையில் குறைந்தபட்சம் 90 அடிக்கு நீர் இருந்தால் மட்டுமே சாகுபடிக்கு முழுமையாக நீர் திறக்க முடியும். நடப்பாண்டில் அணையில் போதுமான நீர்இருப்பு இல்லாத காரணத்தால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியவில்லை. கர்நாடகவில் உள்ள கபினி,



கேஆர்எஸ் அணைகளிலிருந்து உபரிநீர் திறப்பால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

அணையின் நீர்மட்டம் 91 அடியை எட்டியுள்ள நிலையில், இன்று (1-ம் தேதி) முதல் 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி இன்று காலை நடந்தது. இதற்காக சென்னையில் இருந்து சேலத்திற்கு தனி விமானம் மூலமாக முதல்வர் விஜய் வந்தார்.

பின்னர், சாலை மார்கமாக மேட்டூர் அணைக்கு வந்த நிலையில் காலை 11.35 மணியளவில் மேட்டூர் அணையில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதான 8 கண் மதகுகளை இயக்கி டெல்டா பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்தார்.

அணையிலிருந்து சீறிப்பாய்ந்து வெளியேறிய நீரில் நெல்தானியங்கள், மலர்களைத் தூவி வரவேற்றார். முதற் கட்டமாக, விநாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக இன்று மாலைக்குள் வினாடிக்கு 7 ஆயிரம் கன அடியாக உயர்த்தப்படுகிறது.

மேட்டூர் அணையின் 93 ஆண்டு கால வரலாற்றில், டெல்டா பாசனத்துக்கு காலதாமதமாக நீர் திறக்கப்படுவது இது 62-வது முறையாகும். ஜூன் 12-ம் தேதி முன்பு 11 முறையும், ஜூன் 12-ம் தேதி 20 முறையும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் மாத்தில் தண்ணீர் திறப்பது 4-வது முறையாகும் என்பது குறிப்பிடதக்கது.

முன்னதாக, சேலம் விமான நிலையத்தில் அமைச்சர்கள், மாவட்ட நிர்வாகம், காவல் துறை உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் முதல்வர் விஜயை வரவேற்றுனர். தொடர்ந்து, மேட்டூருக்கு வரும் வழியில் சாலையில் காத்திருந்த மக்கள், முதல்வர் விஜய்க்கு மலர்தூவி உற்சாக வரவேற்றனர். தொடர்ந்து, அணையின் வலது கரை பகுதியில் காவல் துறை சார்பில் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

**நீர்மின் நிலையத்தில் ஆய்வு:** அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறத்து வைத்த பிறகு, நீர்வளத்துறை சார்பில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியை முதல்வர் விஜய் பார்வையிட்டார். பின்னர், அணையின் சுரங்க பாதை பகுதியில் நடந்து சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், அணை நீர் மின் நிலைத்திற்கு மின் உற்பத்தி நடைபெறுவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

**மின் உற்பத்தி தொடக்கம்:** மேட்டூர் அணையில் இருந்து. துவக்கத்தில் விநாடிக்கு 3,000 கன அடி வீதம் திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக வினாடிக்கு 7,000 கனஅடி வரை அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் சுரங்க மின் நிலையம் அணை மின் நிலையம் மற்றும் 7 கதவணைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி தொடங்கியுள்ளது.

மேட்டூர் அணையின் வலது கரையில் நடைபெற்ற இவ் விழாவில் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த், போக்குவரத்து துறை அமைச்சர் பார்த்திபன், நீர்வளத்துறை செயலாளர் பிரசாந் வடநேரே, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், எம்எல்ஏக்கள் சிவக்குமார், லட்சுமணன், பழனிவேல், மண்டல தலைமை பொறியாளர் ஜெயக்குமாரி, மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# “நிலையற்ற சூழலுக்கு மத்தியிலும் இந்தியா 7.8% வளர்ச்சியை எட்டியுள்ளது”

புது டெல்லி: செப்.2-

போர்கள் மற்றும் நிலையற்ற சூழலுக்கு மத்தியிலும் இந்தியா 7.8% வளர்ச்சியை எட்டியுள்ளது என்று பெருமிதம் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் கூட்டு முயற்சியாலும் உறுதியாலுமே இது சாத்தியமானது என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட வீடியோவில், “7.8 சதவீத ஜிடிபி வளர்ச்சியை எட்டியதற்காக நாட்டின் மக்களுக்கு நான் வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களின் கூட்டு முயற்சியாலும் உறுதியாலுமே இது சாத்தியமானது. எங்கும் மோதல்கள், போர்கள் மற்றும் நிலையற்ற சூழல் நிலவிய போதிலும் இந்தியா இந்த மைல்கல்லை எட்டியுள்ளது.

எல்லா திசைகளிலிருந்தும் போர்ச் செய்திகள் வருகின்றன, உலகம் நெருக்கடிகளால் சூழப்பட்டுள்ளது. விநியோகச் சங்கிலிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

2020-ல் கோவிட் காலம் தொடங்கியதிலிருந்து, எங்கும் நிலையான சூழல் இல்லை. இருப்பினும்,



இந்தியா தொடர்ந்து வேகமாக முன்னேறி வருகிறது.

அதேவேளையில், நாட்டிற்குள்ளேயே சிலர் அவநம்பிக்கை என்னும் ஆழமான பள்ளத்தில் மூழ்கி, பொய்களைப் பேசி, நம்பிக்கையின்மையைப் பரப்புகிறார்கள். இவை அனைத்தையும் கடந்து, தடைகளைத் தகர்த்து, நாடு 7.8% வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது. நாம் இந்த வேகத்தைத் தக்கவைக்க வேண்டும். நாம் தொடர்ந்து முன்னேற வேண்டும்; அதற்கு நாம் சுயசார்பு இந்தியா ஆவது அவசியம்.

சுதேசி மற்றும் உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை ஆகிய மந்திரங்களைப் பின்பற்ற வேண்டும். சுற்றுலாவுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதையோ, வெளிநாடுகளில் திருமணங்களை நடத்துவதையோ தவிர்க்க வேண்டும்.’இந்தியாவில் திருமணம்’ என்ற மந்திரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதேபோல், அவசியமென்றால் ஒழிய தங்கம் வாங்குவதையும் தவிர்க்க வேண்டும்.

சுதேசி மற்றும் சுயசார்பு ஆகியவற்றை நாம் எவ்வளவு அதிகமாக வலியுறுத்துகிறோமோ, அந்தளவுக்கு சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில் நமது இளைஞர்களிடம் ஒரு ’வளர்ச்சியடைந்த இந்தியாவை’ ஒப்படைப்போம் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இன்றைய நமது கடின உழைப்பின் மூலம், இளம் தலைமுறையினரின் கனவுகளை நாம் நிச்சயமாக நனவாக்குவோம்.

நமது முயற்சிகளில் எவ்விதக் குறைவும் இருக்கக்கூடாது. நமது கொள்கைகள் உறுதியானவை, நோக்கங்கள் தூய்மையானவை. 140 கோடி இந்தியர்களின் கூட்டு வலிமை நாட்டை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்ல ஒன்றிணைகிறது. உறுதியான முடிவை எடுப்போம், அந்த முடிவை நனவாக்க ஒன்றிணைந்து முன்னேறுவோம்." என்றார்.

# அந்நியர் ஆட்சிக்கு எதிராக வெகுண்டெழுந்த தமிழ் வீரர் பூலித்தேவர்: மு.க.ஸ்டாலின்

சென்னை: செப்.2-

“சிப்பாய்ப் புரட்சிக்கு நூறாண்டு முன்பே அந்நியர் ஆட்சிக்கு எதிராக வெகுண்டெழுந்த தமிழ் வீரர் பூலித்தேவர்” என அவரின் பிறந்தநாளையொட்டி, திமுக தலைவர் ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “சிப்பாய்ப் புரட்சிக்கு நூறாண்டு முன்பே அந்நியர் ஆட்சிக்கு எதிராக வெகுண்டெழுந்த தமிழ் வீரர் பூலித்தேவர்






பிறந்தநாள். தன்னலத்தை விடுத்து தமிழ்நிலத்தின் தன்மானமே பெரிதெனக் கருதி ஏகாதிபத்திய எதிர்ப்புக் களத்தில் போரிட்ட மாவீரர் பூலித்தேவருக்கு என் புகழ் வணக்கத்தை உரித்தாக்குகிறேன்” என இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 52 கோயில்களில் அமலுக்கு வந்தது ‘செல்போன்’ தடை - பழநி முருகன் கோயிலில் தீவிர சோதனை

திண்டுக்கல்: செப்.2-

அறுபடை வீடுகள் உட்பட 52 முதுநிலைக் கோயில்களில் செல்போன் கொண்டு செல்வதற்கான தடை இன்று (செப்.1) முதல் அமலுக்கு வந்துள்ள நிலையில், பழநி முருகன் கோயிலில் தீவிர சோதனைக்கு பிறகே பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்ட பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்களில் சிலர் கோயில் வளாகத்துக்குள் புகைப்படம், வீடியோ, செல்ஃபி எடுப்பது, ரீல்ஸ் தயாரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதை தடுக்க, கடந்த 2023 அக்டோபர் 1-ம் தேதி முதல் செல்போன் கொண்டு



செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதல் கட்டமாக அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் அறுபடை வீடுகள் உட்பட 52 முதுநிலைக் கோயில்களில் செல்போன் பயன்பாட்டுக்கான முழுமையான தடை இன்று (செப்.1) முதல் அமலுக்கு வந்துள்ளது. அதன்படி, பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் செல்போன் எடுத்து செல்கின்றனரா? என படிப்பாதை, வின்ச் ரயில் நிலையம் ஆகிய இடங்களில் ‘லக்கேஜ் ஸ்கேனர்’ மற்றும் பணியாளர்கள் மூலம் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

விதிகளை மீறி எடுத்து சென்று பயன்படுத்தும் பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது. பக்தர்கள் தங்கள் செல்போன்களை பாதுகாப்பாக வைக்க படிப்பாதை, ரோப் கார் நிலையம் மற்றும் வின்ச் ரயில் நிலையம் ஆகிய 3 இடங்களில் ஏற்கனவே செல்போன் வைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையங்களில் மொத்தம் உள்ள 14,000 ரேக்குகளில் ஒரு லட்சம் செல்போன்களை பாதுகாப்பாக வைக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. பழநி மலைக்கோயில், திருஆவினன்குடி கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள், தனியார் நிறுவன காவலாளிகள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ஸ்மார்ட் போன் எடுத்து வரவும், பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல்கட்ட பணிகள் நிறைவு: சுய கணக்கெடுப்பு தளத்தில் 10.61 லட்சம் குடும்பங்கள் விவரம் சமர்ப்பிப்பு

சென்னை: செப்.2-

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது நாட்டின் எதிர்கால வளர்ச்சியைத் திட்டமிடுவதற்கான மிக முக்கிய அடிப்படைத் தரவு ஆதாரமாகும்.

கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, வீட்டு வசதி போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான அரசுத் திட்டங்களை வடிவமைப்பது மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு, இந்தியாவில் முதல்கட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (வீடுகள் பட்டியலிடுதல்) கடந்த ஏப். 1-ம் தேதி அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

தமிழகத்தில் முதல்கட்ட கணக்கெடுப்பான களப்பணிகள் ஆக. 1-ம் தேதி முதல் தொடங்கியன. வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்துவதற்கு

முன்னதாக, நடப்பாண்டில் ஜூலை 17 முதல் 31-ம் தேதி வரை சுய கணக்கெடுப்புக்கான தளம் உருவாக்கப்பட்டது. இதன்



மூலம், குடியிருப்பாளர்கள் தங்கள் குடும்ப விவரத்தை அதிகாரப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு இணையதளம் வழியாக சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டது.

முதல்கட்ட கணக்கெடுப்பு பணிகளில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் 1.15 லட்சத்துக்கும் அதிகமான கணக்கெடுப்பாளர்களும் 19 ஆயிரத்துக்கும் அதிகமான மேற்பார்வையாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். கணக்கெடுப்பு பணியின் போது, கணக்கெடுப்பாளர்கள் 33 முக்கியக் கேள்விகளுக்கு பதில்களை சேகரித்தனர். இப்பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

இதுகுறித்து, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநர் எம்.சுந்தரேஷ்பாபு கூறியதாவது: மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல்கட்டத்தில் சுமார் ஒன்றரை லட்சம் பேர் பணியில் ஈடுபட்டனர்.

இப்பணியை எவ்விதத் தடங்கலுமின்றி நிறைவு செய்வதை உறுதிசெய்த அனைத்துக் கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாகப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு, முயற்சிகளுக்கு பாராட்டுகள்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கான இந்த முக்கியத் தரவு சேகரிப்புப் பணிக்காக அளிக்கப்பட்ட விலை மதிப்பற்ற ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் மக்கள், மாநில அரசு உள்பட அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவிக்கிறோம்.

ஜூலை 17-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை சுய கணக்கெடுப்பு தளத்தில் 10.61 லட்சம் குடும்பங்கள் தங்கள் விவரங்களை சமர்ப்பித்துள்ளன. முதல்கட்ட கணக்கெடுப்பு நிறைவடைந்துள்ள நிலையில், தொழில்நுட்ப தரவுகளை இணைக்கும் பணி ஒரு சில நாட்கள் நடைபெறும்.

1948-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின்படி, இந்த செயல்பாட்டின் போது சேகரிக்கப்படும் அனைத்துத் தனிநபர் பதில்களும் ரகசியமாக வைக்கப்படும். இரண்டாம் கட்டமான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# கிருஷ்ணகிரியில் ராகவேந்திர சுவாமி 355-வது ஆராதனை மகோத்சவ விழா



கிருஷ்ணகிரி, செப்.02-

கிருஷ்ணகிரி பழையபேட்டை ராகவேந்திர சுவாமி கோவிலில் 355-வது ஆராதனை மகோத்சவ விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி கோவில் வளாகத்தில் பல்வேறு சிறப்பு பூஜைகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கடந்த மாதம் 29-ஆம் தேதி விழா தொடங்கியது. தொடர்ந்து 30-ஆம் தேதி ராகவேந்திர சுவாமிக்கு பஞ்சாமிர்த அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. மாலை ராகவேந்திர சுவாமிகளின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டு மேளதாளங்கள் முழங்க திருவீதி உலா நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக நேற்று காலை ராகவேந்திர சுவாமிக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து ராமநாம ஜெபம், லட்சார்ச்சனை, மகா மங்களாரத்தி ஆகியவை நடைபெற்றன. சிறப்பு பூஜைகளில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கப்பட்டது.

இதேபோல், கிருஷ்ணகிரி புதுப்பேட்டை செந்தில்நகர் பகுதியில் உள்ள உடுப்பி ஆஞ்சநேயா ராகவேந்திர சுவாமி கோவிலிலும் 355-வது ஆராதனை மகோத்சவ விழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

இதையொட்டி அதிகாலை ராகவேந்திர சுவாமி சுப்ரபாதம், நிர்மால்ய அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து வேதபாராயணம், சிறப்பு அலங்காரம் மற்றும் மகா மங்களாரத்தி நடைபெற்றன. விழாவின் நிறைவில் பக்தர்களுக்கு தீர்த்தப் பிரசாதம் வழங்கப்பட்டது.

இரு கோவில்களிலும் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளில் கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ராகவேந்திர சுவாமியை வழிபட்டு அருள் பெற்றனர். விழாவையொட்டி கோவில்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



# செங்குன்றத்தை சேர்ந்த டாக்டர் என்.எம்.டி.கோபாலுக்கு சிறந்த மருத்துவர் விருது

மாதவரம், செப்.2-

சென்னை சேலையூர் தனியார் மண்டபத்தில் லயன்ஸ் இன்டர்நேஷனல் மாவட்டம் 324 ஏ1 சார்பில் மருத்துவர்களை கவுரவிக்கும் வகையில் மருத்துவர் தினவிழா மாவட்டத் தலைவர் நாகராஜன் தலைமையில் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆளுநர் நரசிம்மன் கலந்து கொண்டு, செங்குன்றம் எழில் டயாபட்டிக் மருத்துவமனை இயக்குநரும், செங்குன்றம் இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் தலைவருமான மருத்துவர் என்.எம்.டி. கோபாலுக்கு சிறந்த மருத்துவருக்கான விருதுயினை வழங்கி கவுரவித்தார்.

பின்னர் உடனடி முன்னாள் ஆளுநர் மணிசேகர், முதல் நிலை ஆளுநர் ஜெயக்கொடி, இரண்டாம் நிலை ஆளுநர் பாலசுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் ஆறுமுகம், கனவு ஆசிரியர் அமைப்பு இயக்குநர் தாமரைக்கண்ணன், காமராஜர் தின மாவட்டத் தலைவர் ரூபி மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரையாற்றினர். இதில் லயன்ஸ் சங்க மாவட்ட, மண்டல, வட்டார மற்றும் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# பரதராமி ஸ்ரீ பச்சையம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா

ராணிப்பேட்டை செப்.02-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் திமிரி அடுத்த பரதராமி கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ மன்னார் சாமி சமேத ஸ்ரீ பச்சையம்மன் திருக்கோயில் நன்னீராட்டு பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக ஆரணி சைதாப்பேட்டை ராஜப்பாசிவம் குருக்கள் குழுவினர்களால் யாகசாலைகள் அமைத்து 108 ஓம திரவியங்கள் கொண்டு பூஜைக்கப்பட்ட கலச நீரை மேல தாள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு விமான கோபுரத்திற்கு ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை விழா குழுவினர்கள், ஊர் பொதுமக்கள் ஆகியோர் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இந்த கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ சென்னை, முகப்பேர் கிழக்கு, டாக்டர் எம்ஜிஆர் நகரில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் ஆவணி மாதம் 14ஆம் தேதி திங்கட்கிழமை திருதியை திதி ரேவதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில், துலா லக்னத்தில் சிவாச்சாரியார்களால் வேத மந்திரங்கள் ஓதி, வானவேடிக்கை மேல தாளங்களுடன், யாகசாலையில் பூஜித்த கலச நீரை கோபுரத்தின் உச்சியில் ஊற்றி பின்பு பொதுமக்கள் மேல் தெளிக்கப்பட்டது. சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்ற பின்பு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய தலைவர் எஸ் பி மஞ்சுநாதன், செயலாளர் பி.சேகர், பொருளாளர் ராமு. சிறப்பாக செய்திருந்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



# பத்திரிகையாளர்களை அவமதிக்கும் வகையில் சுற்றறிக்கையை வெளியிட்ட நாட்றம்பள்ளி வட்டாட்சியர் கௌரிசங்கரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர். செப்.2-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி வட்டாட்சியர் கௌரிசங்கர் பத்திரிகையாளர்களை அவமதிக்கும் வகையில் சுற்றறிக்கையை வெளியிட்டத்தை கண்டித்து திருப்பத்தூர் பிரஸ் கிளப் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பிரஸ் கிளப் தலைவர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது, இந்த ஆர்ப்பாட்டத்தில் பத்திரிகையாளர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பறிக்கும் வகையில் சுற்றறிக்கை வெளியிட்டு இருப்பது ஒட்டுமொத்த பத்திரிகையாளர்களையும் அவமதிக்கும் செயலாகும், பத்திரிக்கையாளர்கள் கண்ணியத்தை கொச்சைப்படுத்தி சுற்றறிக்கை வெளியிட்ட வட்டாட்சியர் கௌரி சங்கர் மீது தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது, இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் மாவட்ட தலைவர் வினாயகமூர்த்தி, மாவட்ட செயலாளர் ஆனந்தகுமார், தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்க மாவட்ட தலைவர் ராஜீவ்காந்தி மற்றும் திருப்பத்தூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள், விவசாய சங்கம், RTI, சமூக ஆர்வலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர், முடிவில் திருப்பத்தூர் பிரஸ் கிளப் செயலாளர் சரவணன் நன்றி கூறினார்.



# அல்லிநகரம் நகராட்சியில் இறைச்சி கடைகள் ஆய்வு

தேனி செப்.2-

தேனி மாவட்டம், தேனி நகர் பகுதியில் பங்களா மேடு, மதுரை சாலை, பெரியகுளம் சாலை, கான்வென்ட், அல்லிநகரம் மற்றும் பொம்மையகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 23 இறைச்சி மற்றும் மீன் கடைகளில் தேனி-அல்லிநகரம் நகரம் மற்றும் வட்டாரப்பகுதி உணவுப்பாதுகாப்பு அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.ஆய்வின்போது கொட்டுப்போன நிலையில் இருந்த இறைச்சி மற்றும் மீன் 7.5 கிலோ பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது- மேலும், சுகாதாரமற்ற நிலையில் செயல்பட்ட 2 இறைச்சி கடைகளுக்கு உணவுப்பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006 இன்கீழ் ரூ.4000/- அபராதம் விதிக்கப்பட்டு நோட்டீஸ்வழங்கப்பட்டுள்ளதுபொதுமக்களுக்கு சுகாதாரமான இறைச்சி மற்றும் மீன்களை விற்பனை செய்ய வேண்டுமென உணவு வணிகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, இப்பகுதிகளில் தொடர் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என உணவு பாதுகாப்புத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பால் கொள்முதல் விலை உயர்வுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி, செப்.02-

தமிழக அரசு அறிவித்துள்ள பால் கொள்முதல் விலை உயர்வுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் வரவேற்பு தெரிவித்து ள்ளனர். அதேவேளையில், பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.50 ஆக உயர்த்த வேண்டும் என்றும், கால்நடை தீவனங்களை மானிய விலையில் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ராமகவுண்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆவின் பால் கொள்மு தல் விலையை லிட்டருக்கு ரூ.44 ஆக உயர்த்தி தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை தமிழக பால் உற்பத்தியாளர்கள் வரவேற்கின்றனர். இருப்பினும், பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.50 ஆக உயர்த்த வேண்டும் என்பதே பால் உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

தற்போது 4 சதவீத கொழுப்புச் சத்து மற்றும் 8 சதவீத இதர சத்துகளைக் கொண்ட பாலுக்கு ரூ.32, மானியமாக ரூ.3 என மொத்தம் ரூ.35 மட்டுமே வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யூனியன் சார்பில் வழங்க வேண்டிய ரூ.2 தொகையும் இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, அரசு அறிவித்துள்ள பால் விலை உயர்வின் முழுப் பயனும் விவசாயிகளுக்கு கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும், சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஆவின் பால் விநியோகத்தில் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். மாதாந்திர டோக்கன் முறையில் குறைந்த விலைக்கு பாலைப் பெற்று, செயற்கையாக தட்டுப்பாடு ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டும். பொதுமக்களுக்கு ஆவின் பால் நேரடியாகவும் தட்டுப்பாடின்றியும் கிடைக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேபோல், தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு தலைமை சங்க மாநிலத் தலைவர் நசீர்அகமத் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.44 ஆக உயர்த்தி அறிவித்திருப்பதை பால் உற்பத்தியாளர்கள் வரவேற்பதாக தெரிவி த்துள்ளார்.

பால் உற்பத்தி யாளர்களின் நீண்டகால கோரிக்கையான லிட்டருக்கு ரூ.50 கொள்முதல் விலை வழங்குவதுடன், கால்நடைகளுக்கான தீவனங்களை மானிய விலையில் தமிழக அரசு வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளையும் விரைவாக நிறைவேற்ற வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்திய தமிழக அரசுக்கு பால் உற்பத்தியாளர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## 20 நாட்களாக குடிநீர் இன்றி தவிக்கும் தாராபுரம் நகராட்சி 9-வது வார்டு மக்கள்

# காலிக்குடங்களுடன் சாலை மறியலுக்கு திரண்ட பெண்கள் : தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் அவலம் லாரி மூலம் தண்ணீர் வழங்குவதாக நகராட்சி உறுதி




தாராபுரம், செப்.2-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளில், கடந்த 2 மாதங்களாக முறையான குடிநீர் விநியோகம் நடைபெறாததால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குடிநீர் தேவைக்காக பொதுமக்கள் லாரிகள் மூலம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தாராபுரம் நகராட்சியின் 9-வது வார்டு உள்ள மீனாட்சிபுரம், சொக்கநாதபுரம், கொளிஞ்சிவாடி, பகுதியில் கடந்த 20 நாட்களாக குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர். இதனால் 9,ஆவது வார்டு பகுதியில் மட்டும் சுமார் 2,600 குடும்பங்கள் குடிநீரின்றி கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

அப்பகுதியில் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள 3 ஆழ்துளைக் கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும், கடந்த 3 மாதங்களாக உப்புத் தண்ணீரும் விநியோகிக்கப்படவில்லை என்றும், கடந்த 20 நாட்களாக காவிரி கூட்டுக் குடிநீர் மற்றும் அமராவதி குடிநீரும் முறையாக வரவில்லை என்றும் கூறினர்.

இதனால் குடிநீருக்காக அப்பகுதி மக்கள் தினமும் பணம் செலவழித்து தண்ணீர் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக, தினக்கூலியாக ரூ.300 வரை சம்பாதிக்கும் பெண்கள், தங்களது வருமானத்தின் கணிசமான பகுதியை குடிநீர் வாங்குவதற்கே செலவிட வேண்டியுள்ளதாக வேதனை தெரிவித்தனர்.

தற்போது 20 லிட்டர் குடிநீர் கேன் ரூ.25-க்கும், 2,000 லிட்டர் தண்ணீர் லாரி ரூ.950-க்கும் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. இதனால் 3 நாட்கள் சம்பாதிக்கும் தினக்கூலியை முழுமையாக செலவழித்தால்தான் ஒரு லாரி தண்ணீரை வாங்க முடியும் என்ற அவல நிலை ஏற்பட்டுள்ளதாக பெண்கள் தெரிவித்தனர்.

மேலும், நகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள பொதுக் கழிப்பிடத்திலும் போதிய தண்ணீர் இல்லாததால், அங்கு செல்லும் குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

காலிக்குடங்களுடன் போராட்டம். குடிநீர் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வலியுறுத்தி, 9-வது வார்டு பகுதியைச் சேர்ந்த பெண்கள் காலிக்குடங்களுடன் தாராபுரம்கரூர் சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக திரண்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த தாராபுரம் காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தொடர்ந்து, வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் நகராட்சி குடிநீர் பிரிவு அதிகாரிகள் அப்பகுதி பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், பொதுமக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு காணும் வகையில் நாளை செப்டம்பர் 1ஆம் தேதி மதியம் 12 மணிக்கு லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சி அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதையடுத்து, பெண்கள் சாலை மறியல் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

“தண்ணீர் வரவில்லை என்றால் முற்றுகை”

இதுகுறித்து அப்பகுதி பெண்கள் கூறுகையில், “பல நாட்களாக குடிநீருக்காக அவதிப்பட்டு வருகிறோம். தினக்கூலியாக கிடைக்கும் பணத்தை வைத்து குடும்பத்தை நடத்தவே சிரமமாக இருக்கும் நிலையில், தற்போது குடிநீருக்காகவும் அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. நகராட்சி உடனடியாக நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தபடி நாளை லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட வேண்டும். தண்ணீர் வரவில்லை என்றால், காலிக்குடங்களுடன் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடுவோம்” என்று தெரிவித்தனர்.

குடிநீர் கேட்டு பெண்கள் காலிக்குடங்களுடன் திரண்டதால், தாராபுரம் கரூர் சாலையில் மாலை நேரத்தில் சுமார் ஒரு மணி நேரம் பரபரப்பு நிலவியது.

# உதகை ஜெம்பார்க் கூட்டரங்கில் தமிழ்நாட்டின் நீர்வளங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக்கூட்டம்

நீலகிரி, செப்.2-

நீலகிரி மாவட்டம், உதகை ஜெம்பார்க் கூட்டரங்கில், தமிழ்நாட்டின் நீர்வளங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக் கூட்டம், நீர்வளக்குழுவின் தலைவர் / நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ் பிரதாப் ரூடி தலைமையில் நடைபெற்றது.




நீர்வளங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவர் /நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:-

இந்திய நாடாளுமன்றத்தில் வரும் அனைத்து சட்டங்கள், அரசின் திட்டங்கள், அமைச்சகங்களின் செயல்பாடுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளை முழுமையாக விவாதிக்க அவையில் நேரம் போதாது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும் குழுக்கள் மூலம் இவை விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றன. அந்த வகையில், துறைசார் நாடாளுமன்ற நிலைக் குழுவின் கீழ் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல், பாதுகாப்பு, எரிசக்தி, நிதி, உள்துறை, ரயில்வே, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் என மொத்தம் 24 துறை சார் நிலைக்குழுக்கள் உள்ளன. அதில் நீர்வளங்களுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு (Standing Committee on Water Resourc-es) என்பது பிரதம மந்திரி விவசாயிகளின் நீர்வள (AIBP, KKP, RRR ) திட்டங்களை செயல்படுத்துதல் சமமான நீர் பகிர்மானம் மற்றும் நிலையான வள மேலாண்மைக்காக அமைப்பை பயன்படுத்துதல் ஆகும். நாட்டின் நீர்வள மேலாண்மை தொடர்பான அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை நாடாளுமன்றத்தின் சார்பில் ஆய்வு செய்யும் முக்கியமான குழுவாகும். இக்குழுவானது நீர்வள அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீட்டை ஆய்வு செய்து, மத்திய அரசின் பட்ஜெட்டில் நீர்வளத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து நாடாளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்கும். ஆறுகள், அணைகள், நீர்த்தேக்கங்கள், பாசனத் திட்டங்கள், நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை போன்ற திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், குடிநீரின் தரம், நீர் கிடைக்கும் நிலை, நீர் தரப் பரிசோதனை மற்றும் குடிநீர் வழங்கும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யும். மேலும், நாட்டில் ஏற்படும் வெள்ளம், வறட்சி மற்றும் நீர் பற்றாக்குறையை சமாளிக்க மத்திய அரசின் நடவடிக்கைகளை ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கும். மேலும், மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் பகிர்வு மற்றும் நீர்வள மேலாண்மை தொடர்பான கொள்கைகள் குறித்தும் ஆய்வு செய்யும். மேலும், நீர்வள அமைச்சகத்துடன் தொடர்புடைய மசோதாக்கள் நாடாளுமன்றத் தலைவரால் குழுவுக்கு அனுப்பப்பட்டால், அவற்றின் விதிகள் மற்றும் தாக்கங்களை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும். சம்பந்தப்பட்ட அமைச்சகம்/துறையின் ஆண்டு செயல்பாட்டு அறிக்கையை ஆய்வு செய்து, குறைகள் மற்றும் மேம்பாடுகள் குறித்து பரிந்துரைகள் வழங்கும். நாட்டின் நீர்வளப் பாதுகாப்பு, நீர் சேமிப்பு, நதிகள் மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மை போன்ற நீண்ட கால கொள்கைகளை ஆய்வு செய்யும். தேவையான போது குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் திட்டப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று திட்டங்களின் செயல்பாட்டை பார்வையிடுவார்கள். மேலும் நாட்டின் நீர்வளங்கள் சரியாக நிர்வகிக்கப்படுகிறதா எனவும் மற்றும் மத்திய அரசு ஒதுக்கும் நிதி சரியாக பயன்படுத்தப்படுகிறதா எனவும் மற்றும் குடிநீர், பாசனம், வெள்ளம், வறட்சி, நதிநீர் மற்றும் நீர் பாதுகாப்பு திட்டங்கள் பயனுள்ளதாக செயல்படுகின்றனவா என்பதை நாடாளுமன்றத்தின் சார்பில் ஆய்வு செய்து, அரசுக்கு பரிந்துரைகள் வழங்குவதே இந்தக் குழுவின் முக்கியப் பணியாகவும், மேலும், நீர்வளங்களை பாதுகாப்பது என்பது இன்றியமையாத ஒன்றாகும். அரசு அளிக்கின்ற நீர் வளத்திற்கான திட்டங்களை முழுமையாக செயல்படுத்திட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற நீர்வளக்குழுவின் உறுப்பினர்கள், நீர்வளத்துறை செயலாளர் பிரசாந்த் எம்.வாட்னேரே , மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு , நீர் வளத்துறையினர் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட அதிபெரமனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (01.09.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, 7-ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்காக செயல்பட்டு வரும் “TN SPARK" வகுப்பறையை பார்வையிட்டார். உடன் உதவி செயற்பொறியாளர் ராஜா, உதவி பொறியாளர் சிவபாதசேகரன், நாட்றம்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் ராஜசேகர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

# தாம்பரம் மாநகராட்சி கூட்டத்தில் அதிமுக வெளிநடப்பு எதிர்க்கட்சி தலைவர் சங்கர் கடும் குற்றச்சாட்டு

தாம்பரம், செப்.2-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் இன்று நடைபெற்ற அவசர மாமன்ற கூட்டத்தில் பரபரப்பான சூழல் நிலவியது. மேயர் வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், துணை மேயர் காமராஜ், மாநகராட்சி ஆணையர் பாலசந்தர் மற்றும் திமுக, அதிமுக, சுயேட்சை உள்ளிட்ட 70 கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.




கூட்டத்தின் போது, தங்களது வார்டுகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்று குற்றம்சாட்டிய அதிமுக கவுன்சிலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சங்கர், கடந்த ஆட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 750 கோடி ரூபாய் நிதி என்ன ஆனது என கேள்வி எழுப்பியதாக தெரிவித்தார். ஆனால் அதற்கு பதிலாக உலக வங்கியில் கடன் கோரியுள்ளோம் என்ற தொடர்பில்லாத விளக்கமே வழங்கப்பட்டதாக அவர் குற்றம்சாட்டினார்.

மேலும், கடந்த நான்கரை ஆண்டுகளாக ஒரே நிறுவனம் தொடர்ந்து டெண்டர் பெற்று வருவது ஏன் என்ற கேள்விக்கும் அதிகாரிகள் தெளிவான பதில் அளிக்கவில்லை என்றும் சங்கர் கூறினார்.

கழிவுநீர் சேற்றை அகற்றும் பணிகளில் முதியோர் இல்லங்களைச் சேர்ந்த வயதான நபர்கள் பயன்படுத்தப்படுவதாகவும், இது மனிதநேயமற்ற செயல் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

அதேபோல், அதிமுக கவுன்சிலர்கள் முன்வைக்கும் தீர்மானங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும், திமுக நிர்வாகம் தங்களது கட்சி உறுப்பினர்களின் வார்டுகளுக்கு மட்டுமே அதிக நிதி ஒதுக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பலமுறை போராட்டங்கள் நடத்திய போதிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படாததால், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமியின் ஆதரவுடன் விரைவில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட உள்ளதாகவும் சங்கர் அறிவித்தார்.

உள்ளாட்சி தேர்தலுக்கு இன்னும் ஐந்து மாதங்களே உள்ள நிலையில், மாநகராட்சியின் செயல்பாடுகள் மற்றும் மக்களின் பிரச்சினைகளை பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் நோக்கில் இந்தப் போராட்டம் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தாம்பரம் மாநகராட்சி கூட்டத்தில் எழுந்த இந்த விவகாரம் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறை சார்பில்

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிதலைமை ஆசிரியர்களுடனான மீளாய்வுக்கூட்டம்

தேனி செப்.2-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில். பள் ளிக்கல்வித்துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்க ளுடனான மீளாய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்த லைவர் பேசுகையில், தேனி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலின்றி தொடர்ந்து கல்வி பயின்று, 100% தேர்ச்சி பெற்று, உயர்க்கல்வி பயில வேண்டுமென்ற உயர்ந்த நோக்கில், மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக, நடைபெற்று முடிந்த 20262027 கல்வியாண்டிற்கான முதல் பரு வத்தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைவாக உள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் குறைவதற்கான காரணங்களை கண்டறிந்து, அதனை உடனடியாக நிவர்த்தி செய்து, இனிவரும் தேர்வுகளில் 100% மாணவர்கள் தேர்ச்சி அடை வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மேலும், பள்ளிகளில் இடைநிற்றல் மாணவர்கள் இருக்கும்பட்சத்தில், இடைநின்ற மாணவர்களையும் மற்றும் அவர்களின் பெற்றோர்களையும் உடனடியாக நேரில் சந் தித்து உரிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கி மீளப் பள்ளியில் சேர்ப்ப தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, பள்ளி தலைமையாசிரி யர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி நமது மாவட்டம் 100% தேர்ச்சி பெற்ற மாவட்டம் என்ற நிலையை எட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், ., தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட முதன் மைக் கல்வி அலுவலர் .முருகன், மாவட்ட கல்வி அலுவலர்கள், தலைமையாசிரி யர்கள், ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# ஸ்ரீஇருக்கன்குடி மாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், செப்.2-

மாதவரம்தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி காட்டுநாயக்கன்நகர், பழங்குடிநகர், டாக்டர் வரபிரசாத்நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு கூழ்வார்த்தல் மற்றும் 5-ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் முருகேசன், செயலாளர் குமார், பொருலாளர் மணிகண்டன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. துணைத்தலைவர்கள் முருகன், பாண்யராஜ், மாணிக்கம், பழனிவேல்ராஜ், சக்திவேல், துணைச்செயலாளர்கள் முருகவேல், ஆறுமுகம், முத்துச்சாமி, விஜயகுமார், மணிகண்டன், வெங்கடேசன் வேங்கையன், சரவணபெருமாள் ஆகியோர் முன்னிலையில் கணபதி பூஜை, பந்தகால்நடுதல், காப்புகட்டுதல், பால்குடம் எடுத்தல், கங்கைதிரட்டுதல், கரகம்எடுத்தல், சீர்வரிசை எடுத்தல், அக்கினி கப்பறைஎடுத்தல், கூழ்வார்த்தல் கும்பம் படையல்பூஜை மற்றும் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.



கௌரவதலைவர்கள் காமாட்சியப்பன், சுப்பிரமணி, பழனிகுமார், முருகேசன், வீரராகவன்,பாண்டியன்,பழனிகுமார், இசக்கியப்பன், சின்னமுருகன், நாகராஜ், கோவிந்தராஜ் ஆகியோர் ஒருங்கிணைப்பில் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய அன்னதான குழு நிர்வாகிகள் வெங்கடேசன், வெங்கையன், சக்திவேல், முருகன், சின்னபாண்டி, பாண்டிதுரை, சரவணபெருமாள், சாந்தகுமார், விஜயகுமார், பழனிவேல்ராஜ், கோவிந்தராஜ், செல்லபாண்டி, மணிகண்டன், பெருமாள், கார்த்திக், வினோத்குமார், அலெக்ஸ்பாண்டி, வேற்றிவேல், திபின், ராஜா ,நாகராஜ், செந்தில்குமார், வேலுசாமி, அஜித்குமார், முத்துராஜா,யுவராஜ், தினேஷ்குமார், தீனதயாளன்,மகேஷ்வரன், அரசுமோத்துகருப்பன் ,சரவணன், கண்ணன் உள்ளிட்ட ஆலோ சகர்கள், விழாகுழுவினர்கள், தொண்டர்பணி குழுவினர்கள், மகளிர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது

# கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி கோரி சென்னையில் விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம்

சென்னை, செப்.2-

கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, சென்னை எழும்பூரில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.



விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் அளித்த உத்தரவாதத்தின்படி, கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் உள்பட 35 விவசாய சங்கங்கள் சார்பில், காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டம் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கோரிக்கையை வலியுறுத்தி விவசாயிகள் முழக்கங்கள் எழுப்பினர்.

போராட்டத்தில், தமிழக விவசாயிகள் சங்க கூட்டு இயக்கம் பொதுச் செயலாளர் ஏஎஸ்பி ரவீந்திரன் கூறியது: “தேர்தலின்போது, வாக்குறுதி அளித்த அப்போதைய முதல்வர் வேட்பாளர், 5 ஏக்கர் உள்ள விவசாயிகளின் கடனை முழுமையாகவும், பெரிய விவசாயிகளின் கடனை 50 சதவீதம் வரையும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்.

ஆனால், விவசாயிகள் பயிர்க் கடன் தள்ளுபடியில் மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளார். எனவே, ஒற்றை கோரிக்கைக்காக 3-வது கட்ட போராட்டத்தை தமிழக விவசாயிகள் நடத்தி கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு தேர்தலில்போது, அரசியல் கட்சி தலைவர்கள், வாக்குறுதிகளை மட்டும் அளித்தனர். ஆனால், தற்போதைய முதல்வர், "இது வாக்குறுதிகள் அல்ல. உத்தரவாதம்" என்று தெரிவித்தார்.

2006-ம் ஆண்டு முதல் மூன்று முதல்வர்கள் கடன்களை தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தில் வாடுகிறோம். இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படுகிறோம். எனவே, கடன் தள்ளுபடி அவசியம். முதல்வர்கள் அறிவித்த உத்தரவாதப்படி, கடன் தள்ளுபடி வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம்.

முழுமையான விடுதலை வேண்டுமெனில், கடன் தள்ளுபடி விடுதலை வேண்டும். இதை அறிவிக்க வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும். முக்கிய பொறுப்பாளர்கள், பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் காவல் துறையின் அழைப்பை ஏற்று, அரசை சந்திக்க பேச்சுவார்த்தைக்கு சென்றுள்ளனர்.

மேட்டூர் அணையில் குறைந்த தண்ணீர் உள்ள நிலையில் திறந்தது வருத்தத்தை அளிக்கிறது. இது யாரோ கொடுத்த தவறான தகவல் அடிப்படையில் திறந்துள்ளனர். மேட்டூர் அணை நீர் மேலாண்மை உணர்ச்சிபூர்வமானது. கலந்தாலோசித்து விவசாயிகள் அனுபவத்தோடு செய்திருக்க வேண்டும். தவறான வழிகாட்டுதல் பேரில், முதல்வர் தண்ணீர் திறந்து உள்ளார்” என்று அவர் கூறினார்.

# கிருஷ்ணகிரியில் மிலாடி நபி விழா குழு சார்பில் இரு ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் இலவச திருமணம்

கிருஷ்ணகிரி, செப்.02-

கிருஷ்ணகிரியில் மிலாடி நபி விழா குழு சார்பில் இரு ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

கிருஷ்ணகிரியில், மிலாடி நபி விழாக்குழு சார்பில் நபிகள் நாயகம் பிறந்த நாளையொட்டி மிலாடிநபி விழா மற்றும் 2 இஸ்லாமிய ஜோடிகளுக்கு, இலவச திருமணம் நேற்று நடந்தது. மிலாடி நபி விழாக்குழு தலைவரும் கிருஷ்ணகிரி, திமுக மேற்கு நகர பொறுப்பாளருமான அஸ்லம் தலைமை வகித்தார். மணமக்களுக்கு கட்டில், மெத்தை, பீரோ, காஸ் அடுப்பு, சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சீர்வரிசைகள் வழங்கப்பட்டன.



இதில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ.வுமான மதியழகன் பங்கேற்று, மணமக்கள் வாழ்த்தி பேசினார். அப்போது அவர் பேசியதாவது: ஏழைகள் சிரிப்பில் இறைவனை காணலாம் என முன்னாள் முதல்வர் அண்ணா கூறியுள்ளார். அதன்படி மிலாடி நபி விழாக்குழுவினர், 17 ஆண்டுகளாக மிலாடி நபி விழாவை சிறப்பாக கொண்டாடுவதுடன், 12 ஆண்டுகளாக ஏழை, எளிய இஸ்லாமிய ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் இலவச திருமணம் மற்றும், பிரியாணி விருந்து வழங்கி வருகின்றனர். அவர்களது சேவை மென்மேலும் சிறக்க வேண்டும். புதுமண தம்பதியர் சிறந்த இல்லற வாழ்வை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், திமுக இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் தினேஷ்ராஜன், கிருஷ்ணகிரி மேற்கு நகர பொறுப்பாளர் வேலுமணி, மிலாடி நபி விழாக்குழு நிர்வாகிகள் ரியாஸ், முகமது யஹியா, நதீம், கராமத் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# வீடுதோறும் 4 வகை குப்பை சேகரிப்பு : ஜெய்ஹிந்த்புரத்தில் மாநகராட்சி புதிய நடைமுறை தொடக்கம்

மதுரை, செப்.2-

திடக்கழிவு மேலாண்மை விதிகள்2026ன் கீழ், வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை 4 வகைகளாக தரம் பிரித்து பெறும் புதிய முறையை மதுரை மாநகராட்சி இன்று ஜெய்ஹிந்த்புரத்தில் தொடங்கியது.

மண்டலம்5, வார்டு 80ல் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் மேயர் (பொ) தி.நாகராஜன் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் புதிய குப்பை சேகரிப்பு முறையை தொடங்கி வைத்தனர்.

ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் உள்ள 3,500 வீடுகளுக்கு பச்சை, நீலம், சிவப்பு, கருப்பு என 4 வண்ணங்களில் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. சமையல் மற்றும் மக்கும் கழிவுகள், மக்காத உலர் கழிவுகள், சுகாதாரக் கழிவுகள், சிறப்பு கவனிப்பு கழிவுகள் என குப்பைகள் பிரித்து சேகரிக்கப்படுகின்றன.

மேலும், தினமும் குப்பைகளை முறையாக தரம் பிரித்து வழங்கும் வீடுகளை கணக்கெடுத்து, மாத இறுதியில் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

வீடுகளில் குப்பை தரம் பிரிப்பதை கண்காணிக்க சேது பொறியியல் கல்லூரி தொழில்நுட்பப் பிரிவு மூலம் QR Code ஒட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. QR Code மூலம் தினசரி குப்பை தரம் பிரித்து வழங்கும் வீடுகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

தொடக்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து, தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை சேகரிக்க பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் மாநகராட்சி வாகனங்கள் கொடியசைத்து அனுப்பி வைக்கப்பட்டன.

# சிவங்கை புறவழிச்சாலை: ரயில்வே மேம்பாலப் பணிகள் முடியாமல் மக்கள் பயன்பாட்டிற்கு வராத அவலம்!

சிவகங்கை, செப்.02-

சிவகங்கை நகர்ப்பகுதியில் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.77.14 கோடி திட்ட மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், காஞ்சிரங்கால் பகுதியில் தொடங்கி கீழக்கண்டனி கிராமம் வரை, தஞ்சாவூர் - மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் வகையில் 7 கிலோமீட்டர் தூரத்திற்கு சுற்றுவட்டச் சாலை அமைக்கப்பட்டது.

முடங்கி நிற்கும் ரயில்வே மேம்பாலப் பணிகள் இப்புறவழிச்சாலையின் இடையே இரண்டு இடங்களில் ரயில்வே தண்டவாளங்கள் கடந்து செல்கின்றன. இதனால் அங்கு





ரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், நெடுஞ்சாலைத் துறை மற்றும் ரயில்வே துறை இடையே போதிய ஒருங்கிணைப்பு மற்றும் முறையான அனுமதிகள் பெறப்படாததால், மேம்பாலப் பணிகள் முடிவடையாமல் பாதியிலேயே முடங்கிக் கிடக்கின்றன.

திறந்து வைக்கப்பட்டும் பயன்பாடற்ற நிலை: கடந்த 2023-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு சாலைப் பணிகள் நடைபெற்ற நிலையில், 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் இச்சாலையைத் திறந்து வைத்தார். இருப்பினும், மேம்பாலப் பணிகள் நிறைவடையாததால் பல மாதங்களாகியும் இச்சாலை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வராமல் காட்சிப் பொருளாகவே காட்சியளிக்கிறது.

பொதுமக்கள் & சமூக ஆர்வலர்கள் கோரிக்கை:

கோடிக்கணக்கான ரூபாய் மக்களின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்ட இந்தச் சாலை பயன்பாட்டிற்கு வராததால், நகருக்குள் தினமும் கடுமையான போக்குவரத்து நெரிசலில் சிக்கி பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

எனவே, மாநில அரசும் ரயில்வே நிர்வாகமும் உடனடியாகத் தலையிட்டு, போர்க்கால அடிப்படையில் மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்து, புறவழிச்சாலையை முழு பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும் அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# மாணவர்களின் திறனை அறிய 'ANTHE 2026' : 100% வரை கல்வி உதவித்தொகை; ரூ.2.5 கோடி ரொக்கப் பரிசு

மதுரை, செப்.2-

ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (AESL) சார்பில் மாணவர்களின் திறன், தயார்நிலை மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான செயல்திறனை மதிப்பிடும் ANTHE 2026 திறன் தேடல் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆண்டுகளில் 1 கோடிக்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்துள்ள ANTHE, மாணவர்களின் பாட அறிவு, பகுப்பாய்வுத் திறன், திறனறிவு மற்றும் தேர்வு செயல்திறனை அறிவியல் முறையில் மதிப்பிடும் முக்கியத் தளமாக உருவெடுத்துள்ளது.

ANTHE 2026 தேர்வில் 5 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்கலாம். ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் முறைகளில் தேர்வு நடைபெறுகிறது. தகுதி அடிப்படையில் மாணவர்களுக்கு 100 சதவீதம் வரை கல்வி உதவித்தொகையும், சிறப்பாக செயல்படும் மாணவர்களுக்கு ரூ.2.5 கோடி ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

ஆன்லைன் தேர்வு அக்.27 முதல் நவ.1, 2026 வரையும், ஆஃப்லைன் தேர்வு அக்.11, 25 மற்றும் நவ.1 ஆகிய தேதிகளிலும் நடைபெறும். இதற்கான பதிவுகள் அதிகாரப்பூர்வ ANTHE இணையதளம் மற்றும் நாடு முழுவதும் உள்ள ஆகாஷ் மையங்களில் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் தங்களின் பலம், மேம்படுத்த வேண்டிய பகுதிகள் மற்றும் போட்டித் தேர்வுக்கான தயார்நிலையை அறிந்து கொள்ள ANTHE உதவும் என AESL நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான சந்திர சேகர் கரிசா ரெட்டி தெரிவித்தார்.

# மானாமதுரை ரயில்வே சந்திப்பு அருகே உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்

## சட்டப்பேரவையில் எம்.எல்.ஏ. துரை. இளங்கோவன் வலியுறுத்தல்

மானாமதுரை, செப்.02-

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரின் கேள்வி நேரத்தில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ரயில்வே சந்திப்பு பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும் என மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் துரை. இளங்கோவன் வலியுறுத்தினார்.



சட்டப்பேரவையில் அவர் பேசுகையில், "மானாமதுரை தொகுதியில் உள்ள மானாமதுரை ரயில்வே சந்திப்பு அருகே கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

ஒரு நாளில் ரயில்வே கேட் 50 முறைக்கும் மேல் மூடப்படுகிறது. இதனால் வேலைக்குச் செல்வோர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், அவசர தேவைக்காக செல்லும் பொதுமக்கள் என பலரும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. குறிப்பாக மழைக்காலங்களில், மழையில் நனைந்தபடியே பொதுமக்கள் மிகுந்த மனவேதனையுடன் வாகனங்களை ஓட்டிச் செல்லும் சூழல் நிலவுகிறது. எனவே, பொதுமக்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் அந்தப் பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் துரை. இளங்கோவனின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும், இதுதொடர்பாக விரைவில் உரிய முடிவு எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

மானாமதுரை ரயில்வே சந்திப்பு பகுதியில் மேம்பாலம் அமைப்பது தொடர்பாக எம்.எல்.ஏ. துரை. இளங்கோவன் ஏற்கெனவே பல்வேறு நிலைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். தற்போது அவர் சட்டப்பேரவையில் மீண்டும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருப்பது தொகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# வையம்பட்டியில் செப்.5-ல் மாணவர்களுக்குப் பிரமாண்ட ஓவியப்போட்டி

## ரூ.5 ஆயிரம் மதிப்பிலான பரிசுகள்

## பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்

மணப்பாறை, செப்.02-

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகேயுள்ள வையம்பட்டியில் செப்டம்பர் 5-ஆம் தேதி மாணவ, மாணவிகளுக்கான பிரமாண்ட ஓவியப்போட்டி நடைபெற உள்ளது.

வையம்பட்டி ஆசாத் சாலை அருகேயுள்ள சகாய அன்னை மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் இப்போட்டியில், 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் பங்கேற்றுத் தங்களது ஓவியத் திறமையை வெளிப்படுத்தலாம்.




மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் மற்றும் ஓவியத் திறனை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் இப்போட்டியில் சிறப்பிடம் பெறுபவர்களுக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பிலான பரிசுகள் வழங்கப்பட உள்ளன. பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போட்டிக்கான கலை சார்ந்த பணிகளை நுண்கலை மற்றும் சிற்பக்கலைப் பட்டதாரியான ஓவியக் கலைஞர் குமார் சங்கர் மேற்கொள்கிறார். இவர் தற்போது பெங்களூருவில் இருபரிமாண அசைவூட்டக் கலைஞராகப் பணியாற்றி வருகிறார். நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக, ரஷ்யாவில் வான்வெளிப் பொறியியல் கல்வி பயின்ற மகாகேர்த்தன் ஷெர்வின் செயல்படுகிறார்.

தமிழகம் முழுவதும் உள்ள மாணவ, மாணவிகள் இப்போட்டியில் பங்கேற்கலாம். குறிப்பாக வையம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் பெருமளவில் கலந்துகொண்டு தங்களது ஓவியத் திறமையை வெளிப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# ஆவின் மற்றும் யூனியன் வங்கி இணைந்து வழங்கும் 'மினி டைரி திட்டம்' 4% வட்டி மானியத்துடன் விவசாயிகளுக்கு 1.08 கோடி மதிப்பிலான வங்கிக் கடனுதவி காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்

மதுரை, செப்.2-

மதுரை மாவட்டத்தில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தியைப் பெருக்கவும், கிராமப்புற விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழக அரசின் 'ஆவின் மினி டைரி திட்டத்தின்' (Aavin Mini Dairy Scheme) கீழ், தகுதியுடைய 40 விவசாயிகளுக்கு 4% வட்டி மானியத்துடன் கூடிய யூனியன் வங்கி மூலம் 1.08 கோடி மதிப்பிலான வங்கிக் கடனுதவி காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.08.2026) வழங்கினார்.

மதுரை மாவட்டத்தில் பால் உற்பத்தியை உயர்த்தி ஆவின் நிறுவனத்தின் தினசரி பால் தேவையை பூர்த்தி செய்வதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் குறைந்தபட்சம் 4 கலப்பினக் கறவை மாடுகள் (ஜெர்சி இனம்) வாங்குவதற்கு தலா ரூ.2.70 இலட்சம் கடனுதவி 4% வட்டி மானியத்துடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகை இரண்டு தவணைகளாக (முதல் தவணையாக 2 மாடுகளுக்கு ரூ.1.35 இலட்சம் மற்றும் 6 மாதங்களுக்குப் பிறகு இரண்டாம் தவணையாக 2 மாடுகளுக்கு ரூ.1.35 இலட்சம் விவசாயிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டதன் விளைவாக, கடந்த ஜூன் மற்றும் ஜூலை ஆகிய இரு மாதங்களிலேயே ஆவின் மதுரை கோட்டத்தைச் சேர்ந்த 84 விவசாயிகளுக்கு தலா ரூ.2.70 இலட்சம் வீதம் கடனுதவி அனுமதிக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர். வழக்கமான வங்கிக் கடன் நடைமுறைகளில்

ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆவின் நிறுவனம் பரிந்துரை செய்து, மிகக் குறுகிய நாட்களிலேயே விவசாயிகளுக்கு இக்கடன் எளிதாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி கறவை மாடுகளை வாங்கி தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்வதோடு, மாவட்டத்தின் பால் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆவின் பொதுமேலாளர் (பால் கொள்முதல் மற்றும் உள்ளீடு) மரு. நந்தகோபால் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழக அரசு ஆவின் உற்பத்தியாளர்களுக்கு ஏற்கனவே 41 ரூபாய் விலை உயர்வு அறிவித்திருந்தது. இந்த விலை உயர்வு போதுமானதாக இல்லை என உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கத்தினரிடமிருந்து கோரிக்கை மனுக்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சென்றடைந்ததைத் தொடர்ந்து கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாய் என இன்றைய தினம் 110 விதியின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதன் மூலமாக உற்பத்தியாளர்கள் கறவை மாடுகள் அதிக அளவில் வாங்கி அதன் மூலம் பால் ஆவினுக்கு வழங்குவதன் மூலமாக அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும். மேலும் ஒன்றியத்திற்கு இதன் மூலமாக பால் கொள்முதல் அதிகரிக்கும். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காரிசல்பட்டி பகுதியைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர் திரு. பி.கணேஷ் தெரிவித்ததாவது:

"என்னிடம் ஏற்கனவே இரண்டு கறவை மாடுகள் உள்ளன. கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்பினேன். இதற்காக கடந்த ஆறு மாதங்களாக

பல்வேறு வங்கிகளில் கடன் பெற முயற்சி செய்தும், கடன் நடைமுறைகள் நீண்ட காலம் எடுத்ததுடன், இறுதியில் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

ஆவின் மூலம் கடன் பெறுவதற்கான வாய்ப்பு குறித்து அறிந்து விண்ணப்பித்தேன். ஆவின் அலுவலர்களின் உதவியுடன் நான்கு நாட்களுக்குள் கடன் நடைமுறைகள் முடிக்கப்பட்டன. இதன்மூலம் இரண்டு கறவை மாடுகளை வாங்கியுள்ளேன். ஆறு மாதங்களுக்குப் பிறகு மேலும் இரண்டு கறவை மாடுகளை வாங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கும். இதன்மூலம் எனது பால் உற்பத்தியும் வருமானமும் அதிகரிக்கும். இந்தத் திட்டத்தின் மூலம் உதவிய ஆவின் நிர்வாகத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்தார்.

செல்லம்பட்டி பகுதியைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர் திருமதி கே.சாந்தா தெரிவித்ததாவது:

"என்னிடம் முன்பு பல கறவை மாடுகள் இருந்தன. குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக அவற்றை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இரண்டு கறவை மாடுகளை வாங்கினோம். மேலும் மாடுகளை வாங்க விரும்பியபோதும் வங்கிக் கடன் பெறுவதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் இருந்தன.

எங்களது சிரமங்களை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் ஆவின் நிர்வாகத்தின் கவனத்திற்கு தெரிவித்தோம். ஆவின் அலுவலர்களின் வழிகாட்டுதலுடன் விண்ணப்பித்து, ஒரு வாரத்திற்குள் கடன் பெற முடிந்தது. இதன்மூலம் மீண்டும் எங்களது கால்நடை வளர்ப்பை விரிவுபடுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. விவசாயிகளுக்கு பயனளிக்கும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வரும் ஆவின் நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்தார்.

சிறு பால் பண்ணைத் திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களின் கால்நடை எண்ணிக்கை அதிகரிப்பதுடன், பால் உற்பத்தி மற்றும் அவர்களின் குடும்ப வருமானமும் உயர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, ஆவினுக்கான பால் கொள்முதலும் அதிகரிக்க வழிவகுக்கிறது.

இந்நிகழ்ச்சியில், ஆவின் பொது மேலாளர் திரு. முத்துமாதவன், உதவி ஆவின் பொதுமேலாளர் (பால் கொள்முதல் மற்றும் உள்ளீடு) மரு. நந்தகோபால் பால்வளத்துறை துணைப் பதிவாளர் திரு. இரணியன், கூட்டுறவு சங்க பதிவாளர் திருமதி சரணாரியம்மாள், யூனியன் பாங்க் ஆஃப் இந்தியாவின் பிராந்திய மேலாளர் திரு. சாபுமோன் மற்றும் ஆவின், யூனியன் வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர்.

வெளியீடு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161